Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

நங்கையர் விரும்பும் அழகிய தங்கப்பவுண் நகைகளை தயாரித்து அளிப்பவர்கள்

ஓடர் நகைகள் உடனுக்குடன் செய்து தருவோம்.

விஜயலெட்சுமி ஆபரண மாளிகை

ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 11 ஆம் நாள் ஷவ்வால் பிறை 19 (22-2-65) திங்கட்கிழமை இதழ் 14

# தேர்தல் முடியும்வரை கட்டாய ஓய்வு இல்லை

## ஆட்சேபங்களைத் தொடர்ந்து திறைசேரி தீர்மானம்

கொழும்பு, ஞாயிறு

எதிர்வரும் பொதுத்தேர்தல் முடியும்வரை, கட்டாய ஓய்வுத்திட்டத்தை அமுல் நடத்துவதில்லை என்று திறைசேரி முடிவுசெய்துள்ளது. தேர்தல் முடியு முன்னர் இதுசம்பந்தமான எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் திறைசேரி தீர்மானித்திருப்பதாக அறியப்படுகிறது.

கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது சம்பந்தமாக சில அரசாங்க ஊழியர் சங்கங்கள் நிதி மந்திரியிடம் ஆட்சேபம் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

கடந்தவாரத்தில் புகையிரதப்பகுதியைச் சேர்ந்த ஒரு ஊழியருக்கு கட்டாய ஓய்வு வழங்கப்பட்டது. இதுசம்பந்தமாக அரசாங்கஎழுதுவினைஞர் சங்கம் ஆட்சேபித்திருந்தது. கட்டாய ஓய்வு சம்பந்தமாகவும் குறிப்பாக தமிழ் அரசாங்க ஊழியர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையும் பற்றி நிதிமந்திரியுடன் பேச்சுவார்த்தை நடத்த தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம் முடிவுசெய்துள்ளது. இச்சங்கத்தின் தூதுகோஷ்டி யொன்று இவ்வாரத்தில் நிதிமந்திரியைச் சந்திக்கும்.

அரசாங்க லிகிதர் சேவை சங்கமும் கட்டாய ஓய்வு குறித்து நிதிமந்திரியுடன் பேச்சுநடத்தும்.

## சனிக்கிழமை முதல் டெஸ்ட்

சென்னை, பெப். 21

நியூஸிலந்து கிரிக்கெட் கோஷ்டி வருகிற புதன்கிழமை சென்னை வந்துசேரும். இந்தியாவில் 4 டெஸ்டுகளும், பாகிஸ்தானில் 3 டெஸ்டுகளும் இந்தக் கோஷ்டி விளையாடும். ஒவ்வொரு டெஸ்டும் 4 நாள் நீடிக்கும். வருகிற சனிக்கிழமை சென்னை நேரு ஸ்டேடியத்தில் இந்தியா-நியூஸிலந்து முதல் டெஸ்ட் ஆரம்பமாகும்.

## வேலைநிறுத்த முன்னறிவித்தல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திறைசேரியின் சுற்றுநிருபத்திற்கிணங்க அரசாங்கத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு ஒரு மாதச் சம்பளம் புயல் நிவாரண முற்பணமாகக் கொடுக்கப்பட்டதைப்போல், தங்களுக்கும் கொடுக்கப்படாவிட்டால் வருகிற 25ம் திகதி முதல் வேலை நிறுத்தம் செய்யப்போவதாய் வட இலங்கை அரசாங்க கிருஷிகப்பண்ணை தொழிலாளர் சங்கம், அரசாங்கப் பண்ணை முகாமையாளருக்கு முன்னறிக்கை கொடுத்திருக்கிறது.

## தி. மு. க. அங்கத்தினருக்கு 15 நாள் காவல்

சென்னை, பெப். 21

சென்னை சட்டசபையில் தி. மு. க. அங்கத்தினராய் இருக்கும் திரு. எம். எஸ். மணி 15 நாள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். மணப்பாறையில் கைதுசெய்யப்பட்ட மற்றும் 43 பேரும் 15 நாள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றுக்கு சேலத்தில் 14 இடங்களில் விதிக்கப்பட்ட தடை மேலும் 2 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டது. [illegible]

## "சிரமதானத்தில் மாணவர் அதிகம் ஈடுபடவேண்டும்"

மீசாலை, ஞாயிறு

"நாட்டின் நலன் கருதி சிரமதானத்தில் மாணவர்கள் தீவிரமாக பங்குபற்றுவது பாராட்டக்கூடியது. சிரமதானம் ஓர் புனித கைங்கரியம் கிராம மக்கள் சீரியமுறையில் வாழ இப்பணிபெரிதும் உதவுகிறது" என்று திரு. வீ. என். நவரத்தினம் தெரிவித்துள்ளார்

சாவகச்சேரி வடகிழக்கு ப. நோ. கூ. சங்க சிரமதான இயக்க கூட்டத்தில் பேசுகையில்தான் அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

இ. த. சுப்பிரமணியம் பேசுகையில், சாதி, சமயம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்றில்லாது எல்லோரும் செய்யும் தானம் சிரமதானமாகும் என்று கூறினர்.

சிரமதானத்தி லீடுபட்ட தொண்டர்கள் நிச்சயமாக அதிக பயனடைவார்கள் என்று சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு. ஆர். டி. சிவகுரு கூறினர். இத்தகைய சிரமதானப் பணிகளை எமது நகரசபை ஆதரிப்பது போன்று ஏனைய ஸ்தாபனங்களும் செய்தால் நாட்டின் நலனை அரசினர் துணையின்றி பெறலாம் என்றும் அவர் கூறினர்.

திரு வி. ஈ. சண்முகம், திருமு சபாரத்தினம், திரு வே கந்தையா, திரு அ சுப்பிரமணியம், திரு சு கனகரத்தினம், திரு மு விநாசித்தம்பி உட்படபலர் பேசினர்கள். சாவகச்சேரி வட கிழக்கு பலநோக்கு சங்க ஆதரவில் கண்டிரோட்டிலிருந்து பன்றிக்கேணி சந்தசுவாமிகோயிலுக்கு சுயமுயற்சி அடிப்படையில் சுமார் 400 ரூபா பெறுமதியான ரோட்டை அமைத்தபின் மேற்படி பாராட்டுக்கூட்டம் நடைபெற்றது.

"தென்மராட்சிப் பகுதியில் இன்று சிரமதானத்தில் ஈடுபட்ட முக்கியமாக டல பாடசாலை மாணவர்களுக்கும், பட்டினசபை உறுப்பினர்களுக்கும், மற்றும் எல்லோருக்கும் சங்கசார்பில் நன்றி கூறுவதாக சாவகச்சேரி சிரமதான இயக்கத்தலைவர் திரு மு விநாசித்தம்பி தெரிவித்தார்.

திரு க சங்கரப்பிள்ளை சிரமதானத்துக்குப்பின் நடந்த ஞானதான பொதுக்கூட்டத்திற்கு தலைமைவகித்தார்.

# பெற்ற குழந்தையை விற்ற அன்னை

## சின்னக்கடைச் சந்தையில் 25 ரூபாய்க்கு கொடுத்தார்!

யாழ்ப்பாணம், ஞாயிறு

8 மாத [illegible] அழகான பெண் குழந்தை ஒன் [illegible] ரூபாய்க்கு விற்கப்பட்டது பண்டங்களை பரிமாற்றத்தைப்போல் ஒரு ரூபாய் முத்திரையில் கையொப்பம் பெற்றுக்கொண்டு, இந்த வியாபாரம் நடைபெற்றது

யாழ்ப்பாணம் சின்னக்கடை சந்தைக்கருகில், சென்ற சனிக்கிழமை இந்தக் குழந்தையை விற்றவர் ஒரு இந்தியப் பெண் எனக் கூறப்பட்டது. குழந்தையை வாங்கியவர் கண்மணி என்ற தேங்காய் விற்கும் மற்றோர் பெண்.

குழந்தையைவிற்ற பெண்ணை முதல் கணவன் கைவிட்டுவிட்டதாயும், இதன்பின் இரண்டாவது கணவன் ஒருவரிடம் அவர் அடைக்கலம் புகுந்ததாயும், இரண்டாவது வாழ்வைத் தொடங்க, பெற்ற குழந்தை இடையூறாயிருந்ததே விற்பனைக்குக் காரணம் எனவும் கூறப்பட்டது.

இந்த வியாபார பேரம், ஏராளமான மக்கள்முன் நடைபெற்றது.

## ஆஸ்பத்திரிக் காட்சிகள்

காங்கேசன்துறை, ஞாயிறு

அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளரைப் பார்வையிடுவதற்குப் பதிலாக இரண்டு அப்போதிக்கரிமார்கள் மட்டும் தான் இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் வேலை நேரத்தில் பாதி நேரத்தை மாடு, ஆடு, நாய் முதலியனவற்றை ஆஸ்பத்திரியிலிருந்து கலைப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். கட்டாக்காலிகளினால் நோயாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

## "சம்பவ நேரத்தில் எவரிடமும் விளக்கு இருக்கவில்லை"

### கட்டுவன் மேற்கு கொலை வழக்கில் இறந்தவரின் மனைவி சாட்சியம்

மாவிட்டபுரம், ஞாயிறு

கட்டுவன் மேற்கைச் சேர்ந்த கனியல் - நவநீதன் என்வரைச் சென்ற வருடம் மார்கழி மாதம் 20-ம் திகதி சுட்டுக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்தவர்களான வல்லிபுரம்-வேலாயுதம், வேலுப்பிள்ளை-தம்பிராசா, யோகரத்தினம் என்றழைக்கப்படும் இராமு-யோகராசா ஆகிய மூவர் மீதும் சுன்னாகம்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ் வி மூர்த்தியினல் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு ஜி எல் எச் அத்துருபாணெ முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது காலஞ்சென்றவரின் மனைவி 19 வயது நிரம்பிய கண்மணியை எதிரியின் தரப்பு வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ. சண்முகநாதன் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்தார்.

கண்மணி குறுக்கு விசாரணையில் கூறியதாவது:-

"சம்பவநேரம் ஒருவரிடமும் விளக்கு இருக்கவில்லை. எதிரிகள் எனது கணவனைத் துரத்திக்கொண்டு ஓடும்போது 2-ம் 3-ம் எதிரிகள் முதலாம் எதிரியிடம் சுடு என்று கூறினர்கள், அவர்கள் அப்படிக் கூறியதும் 1-ம எதிரி சுட்டார். 2-ம, 3-ம எதிரிகள் சுடுஎன்று கூறியது எனக்குத் தெளிவாகக் கேட்டது. எதிரிகள்வரும் முன்னர் எனது கணவன்

(6-ம் பக்கம் பார்க்க)

பட்டது. அடுத்த மாதம் 7-ந் திகதிவரை இத்தடை நீடிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைவாக்கு

யோகம், பக்தி, வேதாந்தத்துக்கு பிரம்மச்சரியம் அஸ்திபாரம். அது இல்லாமல் ஆத்மஞானத்தில் முன்னேற்றம் கிடைக்காது. பிரம்மசரியம் புத்தியைக் கூர்மையாக்கும். விளக்கச்செய்யும். சரீரபலமும் ஆத்மபலமும் அதிகமாகும். ஞாபகசக்தி வளரும்.

—சுவாமி சிவானந்தர்.

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 1 உ. (22-2-65)

## சட்டத்தை திருத்தவேண்டும்

மாத்தளையைச் சேர்ந்த ஒரு மலைநாட்டுத் தமிழர் இலங்கையின் பதிவுப்பிரஜையானார். அவரது பிறப்புப்பத்திரத்தில் அவரை "இந்தியத் தமிழர்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. தான் இலங்கைப் பிரஜையாகிவிட்டதால், பிறப்புப் பத்திரத்தில், தம் இனத்தை "இலங்கைத் தமிழர்" அல்லது "தமிழர்" என்று மாற்றவேண்டுமென்று அவர் செய்துகொண்ட ஒரு மனுவை மாத்தளை நீதிபதி நிராகரித்தார். அதன்மீது அவர் செய்துகொண்ட 'அப்பீல்' மனுவை மூன்று நீதியரசர்களடங்கிய சுப்ரீம்கோர்ட் நீதிசபையும் நிராகரித்து வெளியிட்ட முக்கியமான ஒரு தீர்ப்பில், "ஒருவர் தமது இனத்தை மாற்றிக்கொள்ளக் கூடியவகையில் இங்கு சட்டம் இடமளிக்கவில்லை" என்று குறிப்பிட்டுள்ளனர். இத்தீர்ப்பின்மீது பிரிவு கவுன்ஸிலுக்கு 'அப்பீல்' செய்யப்படுமா என்பது தெரியவில்லை. அது வேறு விஷயம்.

இலங்கையின் பிறப்பு இறப்புப் பதிவுச்சட்டத்திலே இந்தியத் தமிழர், இலங்கைத்தமிழர் என்ற தெளிவான இனவேறுபாடு செய்யப்பட்டிருப்பதாயும், அந்தச்சட்டம் 'இந்தியப் தமிழர்' என்பதை தனி இனமாக அங்கீகரித்திருப்பதாகவும் நீதிஅரசர்கள் கூறி, 'இனம்' என்ற சொல் இங்கு சட்டமூலம் விளக்கப்படவில்லை என்றும், என்றாலும், இப்போதுள்ள சட்டப்படி, ஒருவர் தனது 'நேஷனலிட்டி' என்ற நாட்டுரிமையை மாற்றிக்கொண்டாலும், இனத்தை மாற்றிக்கொள்ள முடியாதென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத்தீர்ப்பின் சட்டநிலவரம் எப்படியாயினும், இதனால் மாத்தளை மனுதாருக்கு மட்டுமன்றி, பொதுவாய் பதிவுப் பிரஜைகள் அனைவருக்குமே ஒரு புதிய விசாரம் ஏற்படுவதாக இருக்கும்.

கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம பண்ணியும் பிரம்மசாரி என்று கதையுண்டு. ராமேச்வரம் போனாலும் சனீச்சுவரன் பின்னேடே என்பது போல், தாங்கள் மிகக்கஷ்டப்பட்டு இலங்கைப் பிரஜைகள் ஆன பிற்பாடும்கூட[illegible] தொட்டதற்கெல்லாம் [illegible] பிறப்புப் பத்திரம் [illegible] வேண்டியிருக்கும் இக்காலத்திலே தங்களை "இந்தியத்தமிழர்" என்று அதில் குறிப்பிட்டிருப்பதால், நிர்வாக சம்பந்தமாக பல சங்கடங்களுக்கும் வேற்றுமைகளுக்கும் அவர்கள் உள்ளாகவேண்டியிருப்பது பகிரங்க ரகசியம். 'இலங்கைத் தமிழரே வேற்றுமைக்கு உள்ளாகையில் இந்தியத் தமிழர் விஷயத்தை விளக்கத்தேவையில்லை, இது காரணமாகவே அந்த மாத்தளை அன்பர், பிறப்புப்பத்திரத்தில் திருத்தம் செய்ய இவ்வளவுதூரம் முயற்சி எடுத்திருக்கவேண்டும்.

மக்களிடையே கலப்பு மணங்கள் அதிகம் ஏற்பட்டு வரும் காலமிது. இப்போது "இனம்" என்ற பெயரால் மக்களை பிறப்புப் பத்திரத்தில் வேற்றுமைப் படுத்தவேண்டியது அவசியம் தானா? நாடு அடிமைப்பட்டிருக்கையில், அவர்கள் பிரித்தாளும் தந்திரத்துக்காக, 'இனம்' முதலிய வேற்றுமைகளை பல சட்டத்திலும் புகுத்தினர். நாம் சுதந்திரம் பெற்ற பின்பும்கூட தேசிய ஒற்றுமை ஏற்படவேண்டிய இக்காலத்திலும், உளுத்துப்போன அந்தப் பழைய பாடாவதிச் சட்டங்களை கண்ணை மூடிக்கொண்டு அப்படியே பின்பற்றுவது விவேகமாகுமா? இச்சட்டங்களையும் நிர்வாக விதிகளையும் புனராலோசனை செய்து, இக்காலத்துக்குத் தக்கமுறையில் அவற்றைத் திருத்தவேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது. தேசிய ஒற்றுமையைப் பாதிக்கக்கூடிய எதையும் நீடிப்பது நாட்டுக்கு நல்லதல்ல. "இனம்", "நிறம்". என்ற பெயரால் உலகில் சில நாடுகளில் நடக்கும் கொடுமைகளைக் கண்டிக்கும் [illegible] இவ்வித வேற்றுமை[illegible] காரணம்பற்றியும் வளர்க்க இடமளிக்கமுடியாது.

# பேடன் பவல் பிரபு
## உலக சாரணர் இயக்கத்தின் சிற்பி

— வி. சிவசுப்பிரமணியம் —

உலகிலே காலத்திற்குக் காலம் பல்வேறு இயக்கங்கள் ஆரம்பித்திருப்பதை நாம் வரலாற்றின் வாயிலாக அறிகின்றோம். இப்பேற்பட்ட அநேகமான இயக்கங்கள் ஒரு சில நாடுகளுக்கோ அல்லது ஒருசில பகுதியினருக்கோ சொந்தமாக அமைந்துவிடுகின்றன. ஆனால் பேடல்பவல் பிரபுவினால் ஆரம்பிக்கப்பெற்ற சாரணர் இயக்கமோ சர்வதேச ரீதியில் சாதி, சமய நிற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட உயர்ந்த இலட்சியங்களையுடையதான ஒருமாபெரும் சக்தி வாய்ந்த இயக்கமாக விளங்குகிறது. இன்று சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகராகிய பேடல்பவல் பிரபுவின் பிறந்ததினமாகையால், எங்கெல்லாம் இவ்வியக்கம் நிலவுகின்றதோ அங்கெல்லாம் இத்தினத்தில் சாரணர்கள் ஒன்றுகூடி சாரணர் இலட்சியங்களையும் நோக்கங்களையும் நினைவு கூர்ந்து கொண்டாடுகிறார்கள்.

ராபர்ட் ஸ்டீவன் ஸ்மித் பேடன்பவல் 1857-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ந் திகதி லண்டனில் அவதரித்து இளம் வயதிலேயே தந்தையாரை இழந்து ஏழு பிள்ளைகளில் ஐந்தாவது பிள்ளையாக வளர்ந்தார். சிறு வயதிலேயே இராணுவத்தில் சேர்ந்து இந்தியா, கனடா ஆகிய நாடுகளில் கடமை புரிந்து ஆபிரிக்காவிலேயே பல வீரதீரச் செயல்களைப் புரிந்தார். அங்குதான் இவர் யுத்தகாலத்தில் சிறுவர்களைச் செய்திகள் அனுப்புவதற்குப் பயிற்றுவித்தார். மேலும் ஆபிரிக்காவில் வனவாழ்க்கை இவருக்கு சாரணியத்துக்கு வேண்டிய அனுபவங்களைக் கொடுத்தது. ஆபிரிக்காவே அவரது மனதைக் கவர்ந்தநாடானமையினால் அவர் தனது பிற்கால வாழ்க்கையும் கினியாவில் மேற்கொண்டு 1941-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ந் திகதி தனது 84-வது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவரால் முதலில் வெளியிடப்பட்ட "சாரணர்கட்கு உதவி" என்ற நூல் முதியோருக்குரியதாயினும், சில வருடங்களுக்குப் பின்பே சாரணியத்தில் சிறுவர் பங்குதான் முக்கியம் என்ற நிலைமை ஏற்பட்டது.

1907-ம் ஆண்டு இங்கிலாந்துக் கால்வாயில் அமைந்துள்ள பிரவுண்ஸதீவிலே உலகின் முதல் சாரணர் மகாநாடும் சாரணச் சிறுவர் பாசறையும் இருபது சிறுவர்களுடன் பரீட்சார்த்த முறையில பேடன் பவலால் ஆரம்பிக்கப்பட்டது. 1908ல் சாரணர் பிரசுரங்கள் சில வெளியானதுடன், 1910-ம் ஆண்டளவில் சாரணர் இயக்கம் சிறப்புற்று விரிவடையத் தொடங்கியதை பேடன்பவல் அவதானிக்கவே அவரும் இராணுவ வாழ்க்கையைத் துறந்து தனது இரண்டவது வாழ்க்கையை ஆரம்பித்தார். 1912-ம் ஆண்டு உலக சகோதரத்துவ இயக்கத்தை வளர்ப்பதற்காக உலகப் பிரயாணத்தை மேற்கொண்டார். இதைத் தொடர்ந்து 1916ல் சாரணர் குருளையர் இயக்கமும், 1918ல் தேசாந்திரி (ரோவர்ஸ்) சாரணர் இயக்கமும், 1919ல் உலக சாரணர் பயிற்சி முதல்வத்திற்குமையமாய் விளங்கும் இங்கிலாந்திலுள்ள கில்வெல் மைதானமும் ஆரம்பமாயின. 1920ல் லண்டனில் முதற் சாரணர் ஜம்போறி நடைபெற்றது. பேடல்பவல் பிரபு இலங்கைக்கு 1921-ம், 1934-ம் ஆண்டுகளில் வருகை தந்தது குறிப்பிடத்தக்கது.

இப்படி ஆரம்பமான இவ்வியக்கம் தற்சமயம் 93க்கு மேற்பட்ட [illegible] ஒருகோடிக்கு மேற்பட்ட சாரணர்களை [illegible]. இலங்கையில் சாரணர் இயக்கம் 1919-ல் ஆரம்பமாகித் தற்போது இங்கு 23,545 சாரணர்கள் உளர்.

உலகில் தோன்றியுள்ள மிகப் பெரிய இளைஞர் இயக்கமெனச் சாரணர் இயக்கத்தைக் கணிக்கலாம். ஒரு தரப்பட்ட மாறுபாடில்லாத அடிப்படைக் கொள்கைகளையுடைய ஒரு சர்வதேச இயக்கமிருக்குமேயானால் அது சாரணர் இயக்கமேயாகும். இதில் எதுவித வேறுபாட்டிற்கும் இடங்கிடையாது. சகிப்புத்தன்மையை ஒரு பரந்த கண்ணோக்குடன் ஏற்று மனிதனை மனிதனாகப் பண்படுத்துமியக்கமே யாகும். மனம், வாக்கு காயம் ஆகிய திரிபதார்த்தங்களையும் தழுவி எல்லா வேறுபாடுகளையும் மறந்து உயர்ந்த இலட்சியப் பாதையில் மனிதனை ஒன்றுபட்டுழைக்கச் சாரணியக்கம் வழிவகுக்கின்றது. அன்பினாலும் இரக்கசிந்தையினாலும் சகோதரத்துவத்தை வளர்த்து எக்காலத்திலும் எல்லோருக்கும் சேவைசெய்வதை அடிஅத்திவாரமாகக் கொண்டு உலக சமாதானத்திற்கும் பண்பாட்டிற்கும் ஒரு நிரந்தரப் பாலம் அமைக்க முயல்கின்றது சாரணர் இயக்கம்.

தற்போது அநேக நாடுகளில் சாரணர் பயிற்சி கல்வித் திட்டத்தில் ஒரு பிரதான இடம் பெற்றுள்ளது. நம்நாட்டிலும் ஒவ்வொரு சிறுவனுக்கும் சாரணர் பயிற்சியளிக்கப்படவேண்டுமென்பது அரசினரின் கருத்தாகும். சமூகசேவைத் திட்டங்கள் மூலம் தேசிய புனரமைப்பு வேலைகளில் சாரணர் ஈடுபடவேண்டுமென்பதே தற்காலநோக்காகும்.

பேடன்பவல் பிரபுவினால் உருவாக்கப்பெற்ற சாரணர் இயக்கம் உலக நல்லெண்ணத்தையும் சமாதானத்தையும் நிலைபெறச் செய்வதற்கு அமைக்கப்பெற்ற சிறந்தசாதனையாகும். எச்சிறுவனும் சாரணப் பயிற்சிபெறுவானாயின் அது அவனுக்கு வாழ்க்கையில் கிடைத்த பேறுகளில் சிறந்த பேறாகவமையும். இப்பயிற்சி ஓர் இலட்சியமனிதனை உருவாக்குமென்பதில் ஐயமில்லை.

## வல்வெட்டித்துறை தொலைபேசி இணைப்பு

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித் துறையில் தொலைபேசி இணைப்புக்காக எதிர்பார்த்திருந்தவர்களுக்கு அதனை ஒழுங்கு செய்து கொடுக்காத நிலையில் அரசாங்கதபால்,தந்திப்பகுதியினர் இருக்கின்றனர் இங்கு அமைக்கப்பட்டுள்ள பரிவர்த்தனை நிலையம் 50 லைன் போர்ட்டையே கொண்டுள்ளது. இதனை 100 லைன் போர்ட்டாக உயர்த்துவதற்கு அரசாங்கம் 35,000 ரூபாவை ஒதுக்கியிருந்தும் அதற்குத் தேவையான கூலு பரப்பு நிலத்தை அப்பகுதியில் வாங்கிக்கொள்ள இயலாததால் அதற்குரிய அமைப்பு வேலைகள் தடைப்பட்டுள்ளன.

## கொத்தமல்லி விலை அதிகரிப்பு

காங்கேசன்துறை, ஞாயிறு

கன்னாகத்திலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை இலகாவிலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும், ஐக்கிய பண்டகசாலைகளிலும கொத்தமல்லி வாங்க முடியாத நிலையில் இருக்கிறது. சுன்னாகத்தில் தனியார் கடைகளில் 1-60 சதவீதம் கொத்தமல்லி விற்பனையாகின்றது!

ஆசிரியருக்குக்கடிதம்

## உருத்திரபுரம் மகா வித்தியாலயம்

உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் சேவைபுரிந்த நான்கு வடமராட்சிப் பகுதி ஆசிரியர்கள் குறைந்தகால சேவையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது ஆசிரியர் மத்தியில் மிகவும் தவறானதாக கருதப்படுகிறது. இதனால் குறிப்பிட்ட பாடசாலையின் மாணவர்களுக்கு பெரும் குறைபாடாக இருக்கிறது. மேலும் ஒரு வருடகாலமாக நடாத்தப்பட்டு வந்த எச். எஸ். ஸி. வகுப்பு பட்டதாரி ஆசிரியர்கள் இன்மையால் நிறுத்தப்பட்டிருக்கிறது. தேவையான தகுதியுள்ள ஆசிரியர்களை இங்கு அனுப்பி எச் எஸ் ஸி வகுப்பு தொடர்ந்து நடைபெறவும் இங்கு வாழும் மக்களினதும் பிள்ளைகளினதும் நன்மை கருதி கல்வி அதிகாரிகள் முயற்சி எடுப்பார்களா?

தம்பிநாயகம்,
காரியதரிசி
உருத்திரபுரம் மேற்கு
கிராம முன்னேற்றச் சங்கம்

## சிவராத்திரி விழா

உரும்பராய், ஞாயிறு

உரும்பராய் ஞானவைரவர் கோவில் சிவராத்திரி விழா முடிவு பெறும் தினம், சிவ க்ஷேத்திரபாலர்கட்கு அபிடேக ஆராதனைகளும் இரு நாள் ஞ பகல் அஷ்டோத்ததரசத சங்காபிடேகமும் இரவு நான்கு சாமமும் விசேட அபிடேக ஆராதனைகளும் சமயப்பிரசங்கமும் கூட்டுப் பிரார்த்தனைகளும் நிகழ்ந்து கூனகாம்சாமம் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## ஐயாறன் எழுதுவது

பாம்பன் பாலத்தைக் கட்டிமுடித்தாகி விட்டதாயும் மார்ச் மாதம் முதல் திகதி அதில் ரயில் போக்குவரத்து மீண்டும் நடைபெறுமென்றும் செய்தியைப் பார்த்ததும் நம்ப முடியவில்லை;

இதுவும் மற்றப் பத்திரிகைகளில் இல்லாமல். முதலில் 'ஈழநாடு'வில் மட்டும் வெளியானதைக் கண்ட ஓரன்பர் இது உண்மை தானா என்று கேட்டார். மறுநாள் மற்றப்பத்திரிகைகளிலும் செய்தி வெளியான பின் அவர், முக்கியமான எல்லாச் செய்திகளையும் எல்லாருக்கும் முதலில் 'ஈழநாடு' கடச்கட எப்படிக் கொடுக்கிறது என்று வியந்து பாராட்டினார்.

யாழ்ப்பாணத்துச் செய்திகளை மட்டுமல்லாது, இந்தியா உள்ளிட்டு உலகச் செய்திகளையும் உடனுக்குடன் வெளியிட 'ஈழநாடு' ஊழியர்கள் இரவு பகல் கண்விழித்துத் தொண்டாற்றுகின்றார்கள். ஒரு நவீன தினசரிப் பத்திரிகைக்கு வேண்டிய வசதிகளில் ஆயிரத்தில் ஒன்றுகூட இல்லாமலிருந்தும், உடனுக்குடன் செய்திகளைக் கொடுக்க முடிவதற்கு இறைஅருள்தான் காரணம் என்பதைத் தவிர வேறெதுவும் கூறத்தெரியவில்லை.

திருவருளையும், அன்பர்களின் அபிமானத்தையும் நம்பி நடக்கும் 'ஈழநாடு' விருப்பு வெறுப்புகளின்றி நடுநிலைமை நின்று மேன்மேலும் மக்களுக்கு நல்ல தொண்டு செய்ய முடியுமென்பதே எங்கள் ஆவலும் நம்பிக்கையுமாகும்.

* * *

டிசம்பர் 23-ந்திகதி பாம்பன் பாலம் சூறாவளியால் நாசமாயிற்று. மீண்டும் இந்தப்பாலத்தைக் கட்டவே முடியாதோ என்றும் அஞ்சினோம். இந்தியப் பத்திரிகைகளில், இந்தப் பாலம் நாசமடைந்துள்ள கண்ணுவி காட்சிகளைப் பார்த்தபோது, இது மீண்டும் பயன்படவே செய்யாதென்றும் தோன்றியது. ஆறுமாதங்களில் இது கட்டி முடியலாம் என்று கூறப்பட்டது. ஆனால் இரண்டு மாதங்களில் இது பூர்த்தியாகிவிட்டதாக இப்போது செய்தி கிடைத்துள்ளதைப் பார்த்ததும் இது பத்திரமாக இருக்குமா? அதில் ரயில்கள் முன்போல் ஓட்லாமா? என்றெல்லாம் மனதில் பல சந்தேகங்கள் எழக்கூடும்.

ஆனால் பத்திரமில்லா விட்டால் இன்ஜினியர்கள் இவ்வித தீர்மானம் செய்திருக்கமாட்டார்கள். பன்முறையும் நன்றாகச் சோதனை செய்த பின்பே பிரயாணிகள் ரயிலை விடுவார்கள், எப்படியும் இவ்வளவு சீக்கிரத்தில் இந்தப் பாலத்தை மீண்டும் புதுப்பித்து விட்டவர்களைப் பெரிதும் பாராட்ட வேண்டும். ஸ்ரீ ராமர் இலங்கைக்கு அணை கட்டிய கதைதான் ஞாபகம் வருகிறது.

* * *

புயலுக்கு முன் இங்கிருந்து தமிழ் நாட்டிற்குச் சென்ற ஓரன்பர், சென்னை மார்க்கமாக விமானத்தில் இங்கு திரும்பியுள்ளார். இராமநாதபுரம் முதலிய இடங்களில் சாகுபடி நன்றாக இருப்பதாயும், வேலை கிடைப்பதாயும், ஆண்களுக்கு 5 ரூபாய் வீதமும், பெண்களுக்கு 4 ரூபாய் வீதமும் கூலி கிடைப்பதாயும் சொன்னார். அங்கு தங்கம் பவுண்எடை 95 ரூபாய் தானும். இங்கு 140-க்கு மேலாம். நூற்றுக்கு கமிஷன் இப்போது இங்கு 70-க்குக் குறைந்து விட்டதாயும் தெரிவித்தார்.

பாம்பன் பாலம் சரியாகி, கப்பல் போக்குவரத்தும் வழ

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் விண் வெளிக்கப்பல் சந்திரனில் வெற்றிகரமாக இறங்கியது

## விழுந்து நொருங்குமுன் 7,500 படங்களை பூமிக்கனுப்பியது

### 1970-ல் சந்திரனுக்கு மனிதனை அமெரிக்கா அனுப்பிவைக்கும்

வாஷிங்டன், பெப். 21

சந்திரமண்டலத்தை நோக்கி அமெரிக்கா அனுப்பிய 'ரேஞ்சர்-8' என்ற விண் வெளிக்கப்பல் வானவெளியில் இரண்டு லட்சத்து 34,000 மைல் தூரம் வரை பிரயாணம் செய்து சுமார் ஏழாயிரத்து ஐந்நூறு படங்களைப் பிடித்து பூமிக்கு அனுப்பிவிட்டு சந்திரனிலுள்ள நதியொன்றில் விழுந்து நொருங்கியது. இதில் பொருத்தப்பட்டிருந்த ஆறு காமராக்களும் சரிவர இயங்கியதாகவும் கிடைக்கப்பெற்ற படங்கள் யாவும் "அற்புதமானவை" என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**இரு தினங்களில்...**

கேப் கென்னடி முனையிலிருந்து இரு தினங்களுக்கு முன்னர் அமெரிக்கா இந்த விண்வெளிக் கப்பலை சந்திரனுக்கு அனுப்பிவைத்தது. இந்தக்கப்பல் வெற்றிகரமாகப் பயணம் செய்து நேற்று இரவு சந்திரனைப் போய் அடைந்தது.

சந்திர மண்டலத்தை அடைந்து அங்குள்ள நதியொன்றில் விழுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னதாக காமராக்கள் இயங்கத்தொடங்கின, விண்வெளிக் கப்பலில் பொருத்தப்பட்டிருந்த காமராக்கள் விரைவாகவே படங்களை எடுத்து பூமிக்கு ஒலிபரப்பின.

**அற்புதமான படங்கள்**

பூமிக்கு கிடைக்கப் பெற்ற சுமார் 7,500 படங்களில் முதற் சிலபடங்கள் நேற்று அமெரிக்க டெலிவிஷனில் ஒலிபரப்பப்பட்டன. இந்தப் படங்களை அமெரிக்காவிலுள்ள பல் லாயிரக்கணக்கான மக்கள் பார்த்து ரசித்தனர். இந்தப்படங்களில் சில கழுவப்பட்டிருக்கின்றன என்றும் அப்புதமாகவிருப்பதுடன் பல அந்தரங்கத்தகவல்களையும் கொண்டிருக்கின்றவென்றும் அமெரிக்க விஞ்ஞானியொருவர் கூறினர்.

**அடுத்த மாதத்தில் மற்றுமொன்று**

"ரேஞ்சர்-8" விண்வெளி கப்பலை வெற்றிகரமாக அனுப்பி வைத்துள்ள அமெரிக்கா, அடுத்தமாதத்தில் மற்றுமொரு ரேஞ்சரை சந்திரமண்டலத்துக்கு அனுப்பும். இதன் பின்னர் சந்திரமண்டலத்தைச்சுற்றி வருவதற்கு ஒரு விண்வெளிக் கப்பல் அனுப்பப்படும்.

1970-ம் ஆண்டில் அமெரிக்கா அனுப்பவிருக்கும் விண்வெளிக் கப்பலில் மனிதனும் பிரயாணம் செய்வான் என்றும் மனிதன் இறங்குவதற்குரிய இடத்தைத் தெரிவு செய்வதற்காகத்தான் இப்பொழுது அமெரிக்கா தொடர்ச்சியாக விண்வெளிக் கப்பல்களை சந்திரனுக்கு அனுப்பிவருகிறதென்றும் இது சம்பந்தமான விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் 'ரேஞ்சர்-8' குறிக்கப்பட்ட இடத்திலிருந்து சில மைல் தூரத்தில் போய் விழுந்தது.

## 28 குழந்தைகள் பரிதாப மரணம்

### உணவில் விஷம் காரணம்

அங்கோலா, பெப். 21

அங்கோலா ஆஸ்பத்திரியொன்றில் அனுமதிக்கப்பட்ட 28 குழந்தைகள் நேற்று திடீரென இறந்தன. 20 குழந்தைகள் நோயுற்றுள்ளன.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த இக்குழந்தைகள் உணவில் விஷம் காரணமாகவே மாண்டிருக்கின்றன என்று அறிவிக்கப்படுள்ளது.

தென் வியட்னும்

## கிளர்ச்சித் தலைவர்களை தேடுகின்றனர்

### சைகோனில் அமைதி; ஜெனரல் கான் திரும்பவில்லை

சைகோன், பெப். 21

தென்வியட்னுமில் ஏற்பட்ட திடீர் இராணுவப் புரட்சி நசுக்கப்பட்டதைத் தொடர்ந்து இதில் சம்பந்தப்பட்ட 15 இராணுவத் தலைவர்களைக் கண்டுபிடிப்பதில் ஜெனரல் கான் ஆதரவாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தென்வியட்னுமில் ஏற்பட்ட திடீர் இராணுப் புரட்சி சில மணி நேரத்திற்குள் நசுக்கப்பட்டு, கிளர்ச்சிக்காரர் வசமிருந்த சகல நிலையங்களையும் ஆட்சியினர் கைப்பற்றினர். இந்த நடவடிக்கையில் வெற்றியடைந்த ஜெனரல் கான் நேற்று சைகோன் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும் அவர் இன்னும் இங்கு வந்துசேரவில்லை.

திடீர் புரட்சியில் சம்பந்தப்பட்ட பலர், அரசாங்கத்திடம் சரணடைந்துவிட்ட பொழுதிலும் முக்கியமான 15 தலைவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் அரசாங்க துருப்புகள் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் கிளர்ச்சிக்காரர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஏராளமான ஆயுதங்கள்**

நேற்று மத்திய வியட்னும் கரையோரப் பகுதிகளில், அரசாங்க துருப்புகள் 100 தொன் நிறையுள்ள ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர். இந்த ஆயுதங்கள், கம்யூனிஸ்ட் கொரில்லாக்களால் பயன்படுத்தப்படவிருந்ததென்று அறிவிக்கப்பட்டுள்ளது. சீன றைபிள்களும், ரஷ்ய துப்பாக்கிகளும் ஏராளமாக இருந்ததென்று அறிவிக்கபபட்டது.

கடலில் சென்றுகொண்டிருந்த சிறு பட்கொன்று மூழ்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டனவாம்.

தென்வியட்னுமில் அசம்பாவிதமான சம்பவங்கள் எதுவும் நிகலாத போதிலும், நிலைமை நன்ருகவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாலிபர்சங்க 3-வது ஆண்டு விழா

வட்டுக்கோட்டை, ஞாயிறு

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் உள்ள கூட்டு முன்னணியினர் யூ. என். பி. யையும் ஏகாதிபத்தியத்தையும் ஒழித்துக்கட்டவென தேர்தலில் முன்வந்துள்ளார்கள். பாராளுமன்றத்திற்கு அதிகப்படியான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதினுல் மட்டும் யூ. என். பி. யையும் ஏகாதிபத்தியத்தையும் ஒழித்துக்கட்டிவிட முடியாது. இந்த உண்மையை 1947-ம் ஆண்டிலிருந்து நடைமுறையில் பார்த்து வருகின்ருேம். யூ. என். பி.யைத் தோற்கடிக்க வேண்டுமானுல், அதன் அடித்தளத்தைப் பிடுங்கி எறியவேண்டும்" என இலங்கை வாலிபர் சம்மேளன யாழ். பிரதேச செயலாளர் கே. ஏ. சுப்பிரமணியம் வட்டுக்கோட்டை, சித்தங்கேணி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்தின் மூன்ருவது ஆண்டுநிறைவுவிழாவில் பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

வெ. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. எஸ். சண்முகநாதன், திரு. நடராசா உட்பட வேறுபலரும் சொற்பொழிவாற்றினர். ஈற்றில் புதுவருட நிர்வாகிகளாக கீழ்க்கண்டோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வெ. பாலசுந்தரம், உப தலைவர்: ஏ. இரகுநாதன், காரியதரிசி.எஸ. சண்முகநாதன், உப காரியதரிசி எஸ. தம்பிமுத்து, தனதிகாரி: வெ. சண்முகரத்தினம், அமைப்பாளர்: கே. இராமநாதன்.

# "ஐ. நா. சாஸனம் தற்காலத்துக்கு பொருத்தமற்றது"

## அரசியல் நெருக்கடிகளுக்கு இதுவே காரணம் என்கிருர் யுதாண்ட்

நியூயோர்க், பெப். 21

ஐக்கிய நாடுகள் சாஸனம் தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமற்றது என்றும் இதன்காரணமாகத்தான் அரசியல் நெருக்கடிகள் தோன்றுகின்றன என்றும் ஐக்கியநாடுகள் பிரதம காரியதரிசி யுதாண்ட் கருத்து வெளியிட்டுள்ளார்.

நேற்று நியூயோர்க்கில் நடைபெற்ற சர்வதேச சமாதான மகாநாட்டில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில்தான் யுதாண்ட் மேற்கண்டவாறு கூறினர்.

இந்தமகாநாட்டில் 2000பேர் கலந்துகொண்டனர். யுதாண்ட் தொடர்ந்து பேசுகையில் தற்பொழுது நாடுகளுக்கிடையே திடீரென தகராறுகள் தோன்றிவிடுகின்றன என்றும் நாடுகளின் சட்ட அமைப்புகளும் இதற்குக்காரணமாகவிருக்கின்றன என்றும் கூறினுர்.

"நாடுகளுக்கிடையே அற்ப விஷயங்களில்கூட சிறுதகராறுகள் வந்துவிடுகின்றன இவை எல்லாவற்றையும் கண்டித்து அதிக பாதுகாப்பையும் அளிப்பதற்கு ஐ.நா. சாஸனம் உறுதியான கொள்கை கொண்டிருக்கவில்லை. அரசியல்நெருக்கடிகள் தோன்றுவதற்கும் இச்சாஸனம் வழிவகுக்கிறது. இப்போதைய சூழ்நிலைக்கு இது ஒவ்வாததாகும்" என்றும் யுதாண்ட் குறிப்பிட்டார்.

## மரணதண்டனை

டமாஸ்கஸ், பெப். 21

டமாஸ்கஸிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு சில அந்தரங்கத் தகவல்களைக் கொடுத்த காரணத்துக்காக, இரண்டு இராணுவ அதிகாரிகளுக்கு இங்கு அமைக்கப்பட்ட விசேஷ நீதிமன்றம் இன்று மரணதண்டனை தீர்ப்பளித்தது.

மரணதண்டனைக்குள்ளானவர்களில் ஒருவர் லெப்டினன்ட் கர்னலாகும்.

## விமானங்கள் சுடப்பட்டன

வியன்டைன, பெப். 21

வட, கிழக்கு லாவோஸில் நேற்று நான்கு அமெரிக்கஜெட் விமானங்கள் சுட்டு வீழ்த்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதை அமெரிக்கா மறுத்துள்ளது.

## ஆர்ப்பாட்டம்

கார்ட்டும், பெப் 21

சூடான் தலைநகரமான கார்ட்டுமில் நேற்று இடதுசாரிக் கட்சியினர் முன்னுள் பிரதமரின் வீட்டுக்கு முன்னர் பெருமளவில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் அநேகமான பெண்கள் இருந்தனர்.

## கார்ட்டும்

கார்ட்டும், பெப். 21

சூடான் அரசாங்கம் ராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து இதுவரை புதிய அரசாங்கம் எதுவும் அமைக்கப்படவில்லை. கடந்த வியாழக்கிழமை முதல் இங்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

## லாவோஸ்

லண்டன், பெப். 21

லாவோஸ் நெருக்கடி சம்பந்தமாக அமெரிக்கா மீது குற்றம் சுமத்தி, ரஷ்யா அனுப்பிய குறிப்பை பிரிட்டன் கவனமாக பரிசீலனை செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தாயகம் புறப்பாடு

பம்பாய், பெப். 21

இந்தியாவில் பத்து தினங்கள் சுற்றுவிஜயம் செய்தபின் லாத்து அதிபர், பம்பாய் வழியாக இன்று தாயகம் புறப்பட்டார்.

## ரயில் விபத்தில் 8 பேர் பலி

ஸ்டாக்கோம், பெப். 21

தலைநகரில் ஏற்பட்ட ரயில் விபத்தொன்றில் எட்டுப்பேர் மாண்டனர். 20 பேர் காயமடைந்தனர்.

## வர்த்தக பேச்சுக்கள்

ராவல்பிண்டி, பெப் 21

ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேபுதிய வர்த்தக ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

•

அங்காரா, பெப் 21

துருக்கிக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே புதிய வர்த்தக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

## திருவள்ளுவர் விழா

அல்வாய், ஞாயிறு

திருவள்ளுவர் நினைவுவிழா வதிரி வடக்கு மெ. மி. த. க. பாடசாலையின் இந்துமாமன்றத்தின் சார்பில் மன்றத்தலைவர் திரு. க. ஐயாத்துரை தலைமையில் நடைபெற்றது.

மாணவர்கள் வள்ளுவரின் வரலாறு பற்றிச் சுருக்கமாகப் பேசினுர்கள். தலைமை ஆசிரியர் வள்ளுவரின் அரிய பிறப்பையும் அவரின் சாதனைகளையும், குறளின் மகத்துவத்தையும் எடுத்துக் கூறி அது ஒரு பொது நூலாக எல்லாத் தேசத்தவராலும் போற்றப்பட்டுவருவதால், அது உலகப் பொதுநூல் எனப் போற்றப்பட்டுவருவதாகவும் எளிய நடையில் மாணவர்கள் புரிந்துகொள்ளும் முறையில் குறிப்புரை கூறினுர். பலர் பேசிய பின்னர் திரு. ஆ. கிருஷ்ண பிள்ளை நன்றியுரை கூறினுர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் புரட்சிவாதியா, வைதீகவாதியா?

## மகாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள்

மாவிட்டபுரம், ஞாயிறு "வேள்வியையும் வேள்வியில் உயிர்களைப் பலியிடுதல் பற்றியும் மனிதனைப் பலியிட்டு இட்ட சித்திகளைப் பெறுவது பற்றியும் வேதம்கூறுகிறது. திருக்குறள் கொல்லாமை, புலாலுண்ணாமை என்பன பற்றிப் போதிக்கிறது. வேள்வியிற் கொலை செய்தலைக்பற்றிக் கூறும் வேதத்திற்கும் எவ்வாறுங் கொல்லாமையை விலக்கும் திருக்குறளுக்கும் எத்தகைய சம்பந்தமுமில்லை. வேதக் கருத்துக்களை மறுத்துப்பேசும் திருக்குறளைச் செய்த திருவள்ளுவரை வைதிகவாதி என்பது சிறிதும் பொருந்தாது. திருவள்ளுவர் புரட்சிவாதியே. திருக்குறளில் வைதிகக்கொள்கைகளுக்கு மாறான பல விஷயங்கள் வற்புறுத்தப்படுவதலால் அந்நூலைச் செய்த திருவள்ளுவர் எவ்வாறு வைதிகவாதியாக முடியும்?"

மல்லாகம் இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில் மல்லாகம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியின்போது "திருவள்ளுவர் வைதிகவாதியா? புரட்சிவாதியா?" என்னும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய வித்துவான் நா.சிவபாதசுந்தரனார் "திருவள்ளுவர் புரட்சிவாதி" என்று வாதிடுகையில் மேற் கண்டவாறு கூறினர்.

இவ்விரண்டாம்நாள் மாநாடு பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெற்றது. திரு. இ. நமசிவாயம் தமது தலைமையுரையில்திருக்குறளின் மாண்பு பற்றித் தெளிவித்துவிட்டு அவர் பழம் பெரும் தமிழ்ச் சான்றோர் மரபையொட்டியே தமது திருக்குறளைச் செய்துள்ளார் என்புதும் பல்வேறு வகைக்கொள்கையுடையோரெல்லாம் தத்தம் கொள்கைகளுக் காதாரமாகத் திருக்குறளையே காட்டிவருகின்றரெனவும் திருக்குறளைப் போல மக்கள் கருத்துக்கள் அனைத்தையும் அளந்து அவற்றின் தரங்கண்டு தொகுதத நூல் தமிழில் வேறில்லையெனவும் உலக மொழிகளிலேயே திருக்குறளுக்கிணையான நூல் இல்லையென்பதுவே அறிஞர் பலரின் அபிப்பிராயமெனவும் கூறினர்.

பண்டிதர் கா. நமசிவாயம் பேசுகையில், திருவள்ளுவர் வேதத்திற்கு மாறான எக்கருத்தையும் தெரிவிததிலரெனவும் திருக்குறள் வேதம் விதித்தவற்றை விதித்தும், விலக்கியவற்றை விலக்கியுஞ் சொல்கிறதெனவும், திருவள்ளுவர் ஒரு வைதிகவாதியெனவும்கூறினர்.

பண்டிதர் க. நாகலிங்கம் பேசுகையில் திருக்குறளிற்புரட்சிகரமான கருத்து எதுவும் இல்லையெனவும் ஆரியக் கொள்கை, தமிழ்க் கொள்கை எனக் கொள்கைகளிற்பேதங் காண்பது அறிவீனமென்றும் திருவள்ளுவர்ஒருவைதிகவாதி என்பதில் சிறிதும் ஐயமில்லை எனவும் கூறினர்;

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில், புரட்சியென்பதற்கு சீர்திருத்தம் என்றகருத்தையே காமகொடுக்க விரும்புவதாகவும் திருவள்ளுவர் பழமையின் வழியிற்றேன்றிச் சீர்திருத்தக் கருத்துக்களை ஆங்காங்கு பரப்பிய பெரியாரென்றும் பழமைக் கருத்தோடு புரட்சிக் கருத்தையும் அளவிவழங்கியுள்ள வள்ளுவர் ஒரு புரட்சிவாதியே என்றும் கூறினர்.

திரு. கா. சோமசுந்தரம் பேசுகையில் திருக்குறளில் புரட்சிக்கருத்துக்கள் அதிகமாகக் காணப்படுவதால் திருவள்ளுவர் ஒரு புரட்சிவாதி என்று கூறினர்.

திரு. ம. சிவப்பிரகாசமும் பேசினர். தலைவர், போட்டிகளில் திறமை காட்டியோர்களுக்குப் பரிசில்கள் வழங்கினர். திரு. அ. சரவணமுத்து நன்றி கூறினர்.

முதல் நாள் மகாநாட்டில் பகல் கட்டுரை, மனனப் பேச்சுப்போட்டிகளும், மாலை முன்னுள் பெரும்பகுதி வித்தியதரிசி திரு.அ.சரவணமுத்து தலைமையில் கவியரங்கும் இடம் பெற்றன. கவியரங்கில் திருவாளர்கள் செ.கதிரேசபிள்ளை, இ. நாகராஜன், இ. அம்பிகைபாகன், நா. ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

போட்டிகளில் பரிசுபெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:-

**பேச்சுப்போட்டி**

கே. வசந்தாதேவி, செ.மங்கையர்க்கரசி, கி. சீதாதேவி.

**மனனப்போட்டி**

கே. வசந்தாதேவி, செ.மங்கையர்க்கரசி, க. தனலட்சுமி.

**எழுத்துப்போட்டி**

கி. சரோஜினிதேவி, க.தனலட்சுமி, கே. வசந்தாதேவி.

**குழுப்பாட்டு**

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை.

பாடசாலைகளுக்கிடையே நடந்த போட்டியில் கூடிய புள்ளிகளைப் பெற்று மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை வெள்ளிக் கிண்ணத்தைப் பெற்றது.

REGAL — JAFFNA
NOW SHOWING
Robert Morley
in
THE OLD DARK HOUSE

மனோகரா (யாழ்ப்பாணம்) (போன்) 485
எம். ஜி. ராமச்சந்திரன் சரோஜாதேவி (நடித்த)
மாடப்புரு
தினசரி 6-30 9-30.
சனி, ஞாயிறு
2-30, 6-30, 9-30.

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (கீர்கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
கல்யாணி (நாவலபிட்டி) மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் வெலிங்டனில்
தினசரி பி. ப 2-30, 6-30, 10-00. சனி, ஞாயிறு காலை 10-30, பி ப 2-30 6-30, 10-00
ஜெமினி கணேசன் – சாவித்திரி (நடித்த)
கற்பகம்

# "தமிழருக்கு ஒரு பிரதேசம் தேவை"

வவுனியா, ஞாயிறு "உங்கள் கிராமங்களில் நாளுக்குநாள் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டால் ஒருதினத்தில் இக்கிராமங்களில் தமிழ் பேசும் மக்களே இல்லாமல் போகின்ற நிலை ஏற்படும். இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கென ஒரு பிரதேசம் இருக்க வேண்டும்" என்று வவுனியாத் தொகுதி தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு. ஜி. பி. வின்செண்ட்டை ஆதரித்து பெரிய தம்பனை என்னும் இடத்தில்நடைபெற்ற கூட்டத்தில் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: "சுயேச்சை எம். பி. க்களால் தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பாது காக்க முடியாது. ஆகவே தமிழரசுக்கட்சியின் பலத்தை அதிகரிக்கவேண்டும். சென்ற தேர்தலில் 15 தமிழரசுக்கட்சி எம். பி. க்களை தெரிவுசெய்தமக்கள் இம்முறை 20பேரை தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படியானுல் தான் கட்சிப் பலத்துடன் எமது உரிமைகளை பெறலாம் போராடலாம்."

பெரிய தம்பனை தமிழரசுக் கட்சிக் கிளைத்தலைவர் திரு. ஏ. கார்த்திகேசு தலைமை வகித்தார். திரு. ஜி பி. வின்செண்ட் உட்பட பலர் பேசினர்.

—

# பரீட்சையில் சித்தி

வல்வெட்டித்துறை, சனி அல்வாய் தெற்கைச்சேர்ந்த சின்னையா துரைராசா என்பவர் அண்மையில் நடைபெற்ற புரக்டர் பரீட்சையில் சித்தியெய்தியுள்ளார்; இவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராவர். இலங்கை அரசினர் புகையிரத பகுதியில் உயர்தர உத்தியோகம் வகித்த இவர் அண்மையில் மொழிப்பிரச்சினை காரணமாக ஓய்வு பெற்றுள்ளார்.

# "கூட்டரசு மீண்டும் வந்தால் தமிழரின் நலன் காக்கப்படும்"

## — திருமதி விவியன்

யாழ்ப்பாணம், ஞாயிறு "பல பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய வரவுசெலவுத் திட்டத்தை கூட்டரசாங்க நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா பார்லிமெண்டில் சமர்ப்பித்த போத இந்த நாட்டிலுள்ள முதலாளி வர்க்கத்தினர் பயந்தனர். தமது ஆதிக்கம் அழிந்துபட்டுவிடுமெனக் கருதினர். இதனுலே தான் முதலாளி வர்க்கத்தை ஆதரித்துகூட்டரசாங்கத்தை வீழ்த்தினர்" என்று ஸ்தலஸ்தாபன விடமைப்பு உதவி மந்திரி திருமதி விவியன் குணவர்த்தன நல்லூர்த்தொகுதியில் இடதுசாரி அபேட்சகர் திரு. அ. விசுவநாதனை ஆதரிக்கு முகமாக வண்ணூர்பண்ணையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக் கருகாமையிலுள்ள பாலுகராஜ் மைதானத்தில் திரு. க. பெரியதம்பி தலைமையில் நடைபெற்றஇப்பிரசாரக்கூட்டத்தில் திருமதி விவியன் குணவர்த்தன மேலும் பேசியதாவது:

மார்ச் 22-ம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களை கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா தலைமையில் கூட்டரசாங்கம் அமைக்கப்படுவது உறுதி. இந்தக் கூட்டரசாங்கத்தில் தமிழ்மக்களின் நலனுக்காகப் பாடுபட்டுவரும் இடதுசாரிப் பிரதிநிதிகளைத் தமிழர்கள் தெரிவுசெய்து தமது உரிமைகளைப் பெறவேண்டும்.

கொழும்பு தெற்குத் தொகுதியில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட திரு பெர்னுட் சொய்சா பேசுகையில் இந்த நாட்டில் சர்வாதிகாரம் ஏற்படும் என்ற வீணை புரளியை ஏற்படுத்தி மக்களின் தவறுன எண்ணத்திற்கு அடிகோலுபவர்களையிட்டு மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் எனக் கூறினர்.

நல்லூர்த்தொகுதி அபேட்சகர் திரு. அ. விஸ்வநாதன் பேசும்போது 'இந்த நாட்டில் வாழும் இரு இனமக்களின் நலனுக்காகவும் போராடி வரும் இடதுசாரிகளினுல் நாட்டின் வளம்பெருகி, மக்கள் வாழ்வு சுபிட்சமடையும் என்றும், தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளுடன் வாழவகை செய்யும் முயற்சிகளை மேற்கொள்ளும் கூட்டரசாங்கத்தின் பிரதிநிதியைத் தெரிவுசெய்தல் அவசியமென்றும் குறிப்பிட்டார்.

யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. சி. நாகராஜா பேசும்போது, தமிழர்கள் மொழியுரிமை, பிரதேச உரிமை பெற்றுவாழவேண்டும் என்பதனை எவரும் மறுக்கமுடியாது என்றும் தமிழர்களின் நலனை இடதுசாரிகளினுல் பாதுகாத்துத்தர முடியும் என்றும் குறிப்பிட்டார். திருமதி விவியன் குணவர்த்தனவுக்கு சமசமாஜக் கட்சிச் சின்னமான வெள்ளிச்சாவி ஒன்று பரிசளிக்கப்பட்டது. மற்றும் பலர் பேசினர்.

—

# மட்டக்களப்பில் தேர்தல் பிரசாரம்

கல்முனை, ஞாயிறு கிழக்கிலங்கையிலே குறிப்பாக மட்டக்களப்புப் பகுதியிலே தேர்தல் பிரசாரக் கூட்டத்தை தமிழரசுக் கட்சியினர் இவ்வாரத்தில் ஆரம்பிக்கவிருப்பதாகத் தெரியவருகிறது. கற்குடாத் தொகுதியிலே முதலாவது பிரசாரக் கூட்டம் ஆரம்பமாகி பொத்துவில் வரை செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பிரசாரக் கூட்டங்களில் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம், திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், செ. இராசதுரை ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்துகொள்வார்கள். இதே சமயத்தில் தமிழ்க்காங்கிரஸ கட்சியினரும் கிழக்கிலங்கையிலே குறிப்பாக மட்டக்களப்புத் தொகுதியில் பிரசாரக் கூட்டத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வடமாகாணத்தில் போட்டியிடும் தமிழ்க் காங்கிரஸ அபேட்சகர்கள் எல்லோரும் கிழக்கு மாகாணத்திற்கு வந்து தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பங்கு பற்றலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# வள்ளுவர் முத்திரை வெளியிடக்கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு உலகின் பல மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. குறளிலுள்ள இலக்கியக் கருத்துக்கள் யாவராலும் போற்றப்பட்டுவருகின்றது. இதனுல் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் பெருமை ஏற்பட்டுள்ளது. திருவள்ளுவ நாயனுரை என்றும் போற்ற வேண்டியது நமது கடமையாகும்.

இவ்வாறு வடமாநில சைவ இளைஞர் மாமன்றத்தின் சார்பில் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராஜேஸ்வரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவுக்குத்தலைமைவகித்துப் பேசுகையில் மன்றத் தலைவர் திரு. வை. இராகுநாத முதலியார் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்' மக்களுக்கு வேண்டிய அறிவுரைகள் அனைத்தையும் திருக்குறள் எடுத்து விளக்குகின்றது என்றும அதனை நாம் எல்லோரும் கற்று அதன் வழி நடக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

திரு. சி. சிவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

'சங்க இயக்கிய நூல்கள் முச்சங்கங்களாலும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. திருக்குறள் கடைச்சங்ககாலத்தின் கடைசி நூலாக இருந்தும்' அதில் அமைந்துள்ள சிறந்த கருத்துக்களால் எல்லாச் சாகியத்தாராலும் அது போற்றப்பட்டுவருகின்றது.

இரண்டாயிரம் வருடங்களுக்குமுன் ஆக்கப்பெற்ற இந் நூலின் சிறப்பால் அது இன்றும் யாவராலும் போற்றப்படுகின்றது, மக்களின வாழ்க்கை நெறிகளை உணர்த்தி நிற்கின்றது குறள், அறத்தின் வழிநடந்து, மனதுக்கண் மாசிலனுகி, பகுத்துண்டு பல்லுயிரோம்பி மக்கள் உய்ய மார்க்கங்களை எடுத்துவிளக்குவது திருக்குறள் ஒன்றேயாகும். அரசியல், பொருளியல், சமயத்துறைகள் அனைத்தையும் எடுத்துக்காட்டுகின்றது திருக்குறள்,

திரு. க சொக்கலிங்கம், திரு க சதாசிவம் ஆகியோரும் பேசினர்,

இறுதியில் திருவள்ளுவர் ஞாபகமாக முத்திரைவெளியிடுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றும் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது

திரு. மூ. யோகராசா நன்றி கூறினர்.

—

# இளைஞன் தற்கொலை

உடுப்பிட்டி, ஞாயிறு கரவெட்டி மேற்கைச் சேர்ந்த எஸ். கணேசராசா என்னும் இளைஞர் (19 வயது) நச்சுத்திராவகம் அருந்தித்தற்கொலை செய்துகொண்டார். மரணவிசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிறுபான்மையினரின் பிரச்னை தீர்க்க எம்மிடம் வழியுண்டு"

## சண்முகதாசன் பேச்சு

மாவிட்டபுரம், ஞாயிறு

"சிங்களவர் மத்தியில் செல்வாக்குள்ள ஒரேஒரு கட்சிகம்யூனிஸ்ட்கட்சிதான். இக்கட்சியிடம் சிறுபான்மையினரின் பிரச்னைகள் யாவற்றையும் தீர்க்கக்கூடிய கொள்கைத்திட்டங்கள் உண்டு. ஆகவேதான் தமிழ்பேசும் மக்களை, கம்யூனிஸ்ட்கட்சிக்கு வாக்களிக்கும்படி கேட்கிறோம்".

மேற்கண்டவாறு மல்லாகத்தில் கம்யூனிஸ்ட்கட்சி அபேட்சகர் டாக்டர் சு. வே. சீனிவாசகத்தை ஆதரித்து நடந்த பிரசாரக்கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய திரு. நா. சண்முகதாசன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

சிறுபான்மையோர் பிரச்னை ஒரு பொருளாதார விஷயமாகும். வாழ்க்கைக்கு வேண்டிய உழைப்புக்கு தொழில்தான் முக்கியம். ஆகவே இது ஒரு தொழில் பிரச்னை. பொருளாதார வீழ்ச்சி, சிங்கள - தமிழ் மக்களுக்கிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாகத்தான் சிறுபான்மையோர் பிரச்னை மிகப் பாரதூரமான பிரச்னையாக இருக்கின்றது. வேலைவாய்ப்புக்கு அரசாங்க பாஷையில் பாண்டித்தியம் மிக அவசியமாகையால் அரசாங்கத் தொழில் பெறும் ஒரே நோக்கத்திற்காக சிங்கள மக்களிடையே உள்ள அரசியல் பிற்போக்குக் கட்சிகள் சிங்களம் மட்டும் சட்டத்தை கொண்டுவர ஆட்சியாளரை வற்புறுத்தினர். இதனால் சிங்களமக்கள் உத்தியோகவாய்ப்புகள் பெற்றுவிடுவார்கள் என்று நம்பினார்கள். ஆனால் இந்த பிற்போக்கு வகுப்புவாதச்சக்தி[illegible]ன் சோஷலிச பொருளாதார அமைப்பில் சிங்களம், தமிழ்பேசும் மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை உண்டாக்கலாம் என்பதை எண்ணியும் பார்க்க மறுக்கிறார்கள்.

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி தமிழ்பேசும் மக்களுக்கு சோஷலிச பொருளாதார அமைப்பில் சிறுபான்மையோர்பிரச்னை எல்லாம் தீர்த்துவிடுமென்று கூறுகிறது. ஆகையினால் தமிழ்பேசும் மக்கள் சிங்களம்பேசும் முற்போக்குவாத சக்திகளுடன் சேர்ந்து ஒரே அணியாக இந்த நாட்டில் தொழிலாள, விவசாயிகளின் முற்போக்கு அரசாங்கத்தை நிறுவ முன்வர வேண்டும்.

சிங்களக் கட்சிகளுக்கிடையில் நின்று அச்சிங்களக்கட்சிகளை மோதவிட்டு அந்தமோதலில் தமிழ் பேசும்மக்கள் தாங்கள் ஏதோ ஒரு கட்சியைச் சார்ந்து தமது பிரச்னைகளைத் தீர்த்துவிடலாமென்று எண்ணுவது ஓர் வாட்டுவேதாந்தமாகும். சமஷ்டிக் கட்சியோ அன்றேல் தமிழ்காங்கிரஸ்கட்சியோ இரண்டும் வகுப்புவாதக் கட்சிகளாக இருப்பதால் இவை எதனாலும் சிறுபான்மையோர் பிரச்னையைத் தீர்க்க முடியாது. சிறுபான்மைமக்கள் பிரச்னை தீர்க்கப்படாததனாலேயே இவ்விரு கட்சிகளும் செல்வாக்குப் பெறுகின்றன. இக்கட்சிகளின் பிற்போக்குத் தனிமை மிக அண்மையில் டட்லி சேனநாயக்கா, பிலிப் குணவர்த்தன, கே எம் பி ராஜரத்தின போன்ற இனமத ஏகாதிபத்திய வாதிகளுடன் சேர்ந்து பிற்போக்குவாத ஏரிக்கரைப் பத்திரிகை சுவீகரிப்பு மசோதாவிற்கு எதிராக வாக்களித்ததிலிருந்து தெரிய வருகிறது.

சமஷ்டிமூலம்தான் எல்லாப் பிரச்னைகளையும் தீர்க்கலாம் என்று சமஷ்டிக்கட்சி மக்களுக்குக் கூறுகிறது. ஆனால் இந்தியாவிலும், அமெரிக்காவிலும் சமஷ்டி அரசியல் அமைப்புத்தான் நடைமுறையிலுள்ளது. அங்கெல்லாம் சிறுபான்மையோர் பிரச்னை தீர்க்கப்பட்டு விட்டனவா? சென்ற சில நாட்களுக்குமுன்னதாக தமிழ்நாட்டில் நடைபெற்ற பரிதாபகரமான செயல்களை எண்ணிப் பார்க்கும்படி தமிழ்பேசும் மக்களை கேட்டுக்கொள்கிறேன். அமெரிக்காவில் நீக்கிரோ மக்கள் மனித உரிமைக்காக அடக்கு முறைச்சட்டங்களையும் இராணுவத்தினரையும் எதிர்த்துப் போராடுகின்றார்கள். சிறுபான்மை மக்களின் பிரச்னைக்கு சோஷலிஸம் ஒன்றினால்தான் எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்து வைக்க முடியும்.

மல்லாகம் கோர்ட்டிற்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் திரு. வேலம்பிராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காங்கேசன்துறை கம்யூனிஸ்ட் அபேட்சகர் டாக்டர் சு. வே. சீனிவாசகம் பேசுகையில் சிங்கள மக்களின் ஒத்துழைப்பின்றி இலங்கையில் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்த முடியாது என்றும் இந்நாட்டில் தாழ்த்தப்பட்டவர்களும், தொழிலாளர்களும், விவசாயிகளும் சரிநிகர் சமானமாக சந்தோஷமாக வாழவேண்டுமானால் தம்மைத் தேர்ந்து எடுக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

திருவாளர்கள்: சே. இராசா, வி. ஏ. கந்தசாமி, இ பொன்னையா, எம் கே அந்தனிசில் உட்பட மற்றும் பலர் பேசினார்கள். — —

## சிரேஷ்டஉத்தியோகத்தரிடம் ஆயுத அறை திறப்பு

கொழும்பு, சனி

பொலிஸ நிலயங்களில், துப்பாக்கிகள் ஏனைய ஆயுதங்கள் வைக்கப்படும் அறைகளின் திறப்புகள் தகுதிவாய்ந்த சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகஸ்தரிடமே இருக்க வேண்டுமென சகல பொலிஸ நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

'ரிசேர்வ்' வேலை செய்து கொண்டிருந்த கிரியெல்ல பொலிஸ நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ கான்ஸடபிள் ஒருவர் கடந்த புதன்கிழமை சுட்டுக் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கான்ஸடபிள் கடமை நேரத்தில் நித்திரை செய்தார் என்றும் அப்போது அவரது சட்டைப்பையில் இருந்த ஆயுத அறைத் திறப்பை எடுத்து, அறையைத் திறந்து துப்பாக்கியை எடுத்து அவரையும் சுட்டுக்கொலை செய்ததாக் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக இன்னொரு பொலிஸ கான்ஸடபிள் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

## தொல்புரம் ஐக்கிய பண்டகசாலை

தொல்புரம், ஞாயிறு

அண்மையில் திறந்துவைக்கப்பட்ட தொல்புரம் ஐக்கிய பண்டகசாலை புதன்கிழமை புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

## சனசமூக நிலைய போட்டிகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

கெல்லியடி சனசமூகநிலையம் தனது வருடாந்த விளையாட்டுப்போட்டியை ஏப்ரல் மாதம் புதுவருடப்பிறப்புடன் நடைபெறும் போட்டிகளுக்குப்பதாகத் தீர்மானித்துள்ளது.

# யாழ்ப்பாணத்திடம் கண்டி தோல்வி

## 3 ஓட்டங்களில் 4 விக்கட்டுகள் வீழ்ந்தன

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மத்திய கல்லூரிக்கும் கண்டி சில்வேஸ்டர் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி சில்வேஸ்டர் கல்லூரி எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களை எடுத்தது. யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் 159 ஓட்டங்களை எடுத்தது. சில்வேஸ்டர் கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸில் தேனீர் இடைவேளைக்குப்பின் 6 விக்கெட்டுகளை இழந்து 60 ஓட்டங்களை எடுத்தது. யாழ். மத்திய கல்லூரி பந்தெறி வீரர்களாகிய டொனல், அம்பலவாணர் ஆகியோரின் அபார பந்து வீச்சினால் 3 ஓட்டங்களைக் கொடுத்து மிகுதி 4 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். கண்டி சில்வேஸ்டர் கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸில் மொத்தம் 63 ஓட்டங்களை எடுத்தது. யாழ். மத்திய கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸில் 1 விக்கெட் நஷ்டத்துக்கு 22 ஓட்டங்களை எடுத்து மிகுதி 9 விக்கட்டுகளால் கண்டி சில்வேஸ்டர் கல்லூரியைத் தோற்கடித்தது. இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறறது. மத்தியஸ்தர்களாக சிங்கராஜா, சண்முகநாதன் கடமையாற்றினர்.

### சென். ஜோன்ஸ் வென்றது

கண்டுக்குளி சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில் கண்டுக்குளியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. ஹாட்லிக் கல்லூரி முதல் ஆட்டத்தில் 114 ஓட்டங்கள் எடுத்தது. ஏபிரகாம், சிவகுருநாதன் முறையே 28, 28 ஓட்டங்கள் எடுத்தனர். தெய்வேந்திரா, குயின்ரஸ் இராசரத்தினம் முறையே 4, 3 விக்கெட்டுகளை கைப்பற்றினர். சென். ஜோன்ஸ் முதலாவது ஆட்டத்தில் 183 ஓட்டங்கள் எடுத்தது. சூரியகுமார் 45 ஓட்டங்கள் எடுத்திருந்தார், நடராசசுந்தரம் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். ஹாட்லிக் கல்லூரி இரண்டாவது ஆட்டத்தில் 129 ஓட்டங்கள் எடுத்தது. எபிரகாம், நடராசசுந்தரம் முறையே 45 37 ஓட்டங்கள் எடுத்தனர். தெய்வேந்திரா 4 விக்கட்டுகளைக் கைப்பற்றினார். சென். ஜோன்ஸ் வெற்றியடைவதற்கு 61 ஓட்டங்கள் தேவையானபோது ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு 61 ஓட்டங்களை எடுத்து வெற்றியீட்டியது குறிப்பிடத்தக்கது. தெய்வேந்திரா ஆட்டமிழக்காது 42 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக தியாகராஜா, ஞானரத்தினம் கடமையாற்றினர்.

### யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

யாழ் கல்லூரி யூனியன் கல்லூரிக்கிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டி தெல்லிப்பளையில் இடம் பெற்றது. யாழ். கல்லூரி முதல் ஆட்டத்தில் 9 விக்கட் நஷ்டத்திற்கு 234 ஓட்டங்களை எடுத்து தனது ஆட்டத்தை நிறுத்தியது. யூனியன் கல்லூரி முதல் ஆட்டத்தில் 137 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. யாழ். கல்லூரி மீண்டும் விளையாடாது யூனியன் கல்லூரியை துடுப்பெடுத்தாட விட்டது. யூனியன் இரண்டாவது ஆட்டத்தில் 102 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. யாழ் கல்லூரியைச் சேர்ந்த ஹமீட் அலி, இரத்தின குமார் யூனியன் கல்லூரியைச் சேர்ந்த சிவராசா, பாலசிங்கம் முறையே 102 (ஆட்டமிழக்காமல்), 61, 66, 23 ஓட்டங்களை எடுத்தனர். மேதர், ஞானச்சந்திரன் திறமையாக பந்து வீசினர்கள்.

### வெற்றி தோல்வியில்லை

யாழ். இந்துக் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே இந்து கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. சென். பற்றிக்ஸ் முதல் ஆட்டத்தில் 139 ஓட்டங்கள் எடுத்தது. சந்திபாலே 32 ஓட்டங்கள் எடுத்தார். ஜோதிலிங்கம் 27 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். இரண்டாவது ஆட்டத்தில் பற்றிக்ஸ் 129 ஓட்டங்களை எடுத்தது. ஜெயரத்தினம் 48 ஓட்டங்கள் எடுத்திருந்தார். சிவசத்தியசீலன் (யா. இ. க) 29 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். இந்துக் கல்லூரி தனது முதல் ஆட்டத்தில் 112 ஓட்டங்கள் எடுத்

(6-ம் பக்கம் பார்க்க)


போன்: 7099

ரொலறம்ஸ்

இன்று முதல்

இருப்பு எடுக்கும் மலிவு விற்பனை

வாருங்கள்

| | |
|---|---|
| 14 மட்டும் பூ காஞ்சிபுரம் சேலை வ. வி. 120/- ம. வி. 95/- | இந்தியன் கைத்தறி சேலை வ. வி. 32/50 ம. வி. 27/50 |
| 10 மட்டும் பெங்களூர் சேலை சரிகை வேலையுடன் வ. வி. 67/- ம. வி. 37/50 | இறக்குமதி தடை இருந்தாலும் 10 வீதம் கழித்து விற்பனை செய்கிறோம் கால் சட்டைத்துணி |
| 30 மட்டும் பூ காஞ்சிபுரம் சேலை நூல் வேலைப்பாடுடன் வ. வி. 65/- ம. வி. 35/- | குழந்தைகளின் உடுப்புகள் பல விதவேலைப்பாடுகள் அமைந்த சட்டைகள் 10 வீதக் கழிவு |
| 6 மட்டும் பெங்களூர் சேலை வ. வி. 45/- ம. வி. 27/50 | வெள்ளை லங்கா சாரம் 1-ம் ரகம் ஒருவருக்கு ஒன்று மட்டும் 5/75 |
| 20 மட்டும் ஜே கொட்டன் சேலை சட்டையுடன் வ. வி. 67/50 ம. வி. 60/- | ரொலறம்ஸ் கசங்காத புஸ் சேட் வ. வி. 15/50 ம. வி. 10/- |

உங்கள் அபிமான புடவை மாளிகை

ரொலறம்ஸ்

46, பெரிய தெரு, யாழ்ப்பாணம்.



கரவெட்டி நுகவில் ஐக்கியஜோதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு

மனேச்சர் தேவை

தராதரம்: i JSC சித்தியடைந்தவராக இருக்கவேண்டும்.

ii. கூட்டுறவுப் பயிற்சிபெற்றவராகஇருக்கவேண்டும்.

iii 22 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

iv பிணை ரொக்கம் ருபா 1000/- ஆதனம் ருபா 3000/-

சம்பளம் மாதம் ருபா 90/- பஞ்சப்படியுட்பட. 5-3-65 வரையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

நியமனம் ஒருவருடத்துக்குத் தற்காலிகமானது.

அண்மையில் பெற்ற நற்சாட்சிப்பத்திரங்கள் இரண்டுடன் காரியதரிசிக்கு விண்ணப்பஞ் செய்யவும்.

பி. அ. பிலிப்பையா, காரியதரிசி

அ. லிகோரி தலைவர்

17-2-65 1628

வரி விளம்பரம்

தேவை

பாலர் பாடசாலைக்கு (Montessori School, Ala-veddy) பாலர் கல்வி முறையில் பயிற்சி பெற்ற ஆசிரியை 26-2-65 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்: த. சண்முகராஜா, டச்சு ரோட், அளவெட்டி. 1709

காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிக் கருகாமையிலிருக்கும் நான்கு பரப்புக்காணி விற்பனைக்குண்டு 148, அரசடி வீதி, கந்தர்மடம் என்ற விலாசத்தில் விசாரிக்கவும். 1708

SALE

Salter Made in England To weigh 200 lb by 1 lb 100 lb by 1 2 lb Trade spring balance No 235 T, Contract: A. T Balasubramaniam, Alaveddi 1596


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'இலங்கைமுழுவதும் தமிழர் உரிமையுடன் வாழவேண்டும்'

## சங்கரத்தை கூட்டத்தில் பேச்சு

சங்கரத்தை, ஞாயிறு

"தமிழ் பேசும் மக்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் தமிழ் பேசுவதற்கு உரிமை வேண்டியதில்லை, இலங்கை பூராகவே உரிமை வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் பேசும் மக்கள் உரிமையுடனும், பூரண சுதந்திரத்துடனும் இந்நாட்டில் வாழலாம். சமஷ்டி ஆட்சியை எந்த அரசாங்கம் வந்த போதிலும் கொடுக்கப் போவதில்லை. இதை திட்டவட்டமாக தமிழ் மக்கள் உணரவேண்டும்." முன்னாள் மேற்சபை உறுப்பினர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் சங்கரத்தை துணைவிக்கு அருகாமையில் திரு. எம். கே. சுப்பிரமணியத்தை ஆதரிக்கும் முகமாக நடைபெற்ற தமிழ் காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில், தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பும் படியும் தாங்கள் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை பெற்றுத்தருவதாயும், வருங்கால தேர்தல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

முன்னாள் தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் திரு. எஸ். வன்னியசிங்கம் பேசுகையில், தமிழ் மக்கள் பொருளாதாரத்துறையில் பின் தங்கிய நிலையில் இருக்கின்றார்கள் என்றும் ஆகையால் தமிழ் காங்கிரஸ் கொள்கை இத்துறையில் நன்கு அமைந்துள்ளதென்றும் குறிப்பிட்டனர்.

திருவாளர்கள் எம். கே. சுப்பிரமணியம், ஸ்ரீதரன் உட்பட பலர் பேசினர்கள்.

## ஜயாறன்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மைபோல் ஏற்பட்டதும், இங்கிருந்து பல இந்தியர்களும் தாங்களாகவே அங்கு சென்றுவிடக் கூடுமென்றும் சொன்னர். கேட்க மகிழ்ச்சியாக இருந்தது. கள்ளத்தோணி புகார்களும் இத்துடன் தீர்ந்துவிடுமென்றே நம்புவோம்.

* * *

உரித்தன்றுனக்கிவ் வுடலின் தன்மை உண்மையுரைத்தேன் விரதமெல்லாந், தரித்துந் தவமுயன்றும் வாழா நெஞ்சே தம்மிடையிவில்லார்க் கொன்றல்லார்க்கன்னன், எரித்தான் அனலுடையான் என் தோளானே யெம்பெருமானென் றேத்தா இலங்கைக்கோனை நெரித்தானை நெய்த்தானம் மேவினனை நினையுமா நினைந்தக் காலுய்யலாமே,

—அப்பர் சுவாமிகள்.

## அதிக நேரம் ஒலிபெருக்கிபாவிப்பு

### பொலிசார் வழக்கு?

காங்கேசன்துறை, ஞாயிறு

அளவெட்டியில் நடந்த ஒரு அரசியல் கட்சியின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் சட்டத்தை மீறி அதிகநேரம் ஒலிபெருக்கி பாவித்த குற்றத்திற்காக சுன்னாகம் பொலிசார் அவர்கள் மீது வழக்குத்தொடர்ந்திருப்பதாகத் தெரியவருகிறது.

## உபதபால் கந்தோரில்......

கோண்டாவில், ஞாயிறு

கோண்டாவிலில் உபதபாற் கந்தோரில்காணப்படும்பெயர்ப் பலகையில் கோண்டாவில் என்று பொறிப்பதற்குப் பதிலாக கொண்டாவில் என்று எழுதப்பட்டிருக்கிறது. இது விஷயமாக ஊர்மக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கும், இலாகாக்களுக்கும் அறிவித்து எவ்வித பயனும் கிடைக்கவில்லை எனத் தெரிய வருகிறது.

# "சீனர் பற்றிய செய்தி ஆதாரமற்றவை"

## அரசாங்கம் வெளியிடும் அறிக்கை

கொழும்பு, திங்கள்

இலங்கையில் சீனரின் நடமாட்டம் குறித்து பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகள் ஆதாரமற்றவை என்று பிரதம மந்திரி காரியாலயத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை மேலும் கூறியதாவது.-

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட நாள் தொட்க்கம் தினசரிப்பத்திரிகைகளில் அடையாளம் கண்டுபிடிக்க முடியாத சீனரைப் பற்றிய செய்திகள் தொடர்ந்து வெளிவருகின்றன. அவர்கள் தேர்தல் கூட்டங்களில் புகைப்படங்கள் எடுக்கிறர்களென்றும் கூறப்படுகின்றன. இதனை பொதுமக்கள் படித்திருப்பார்கள். இந்தச் செய்திகள் வேண்டும் என்றே திரிக்கப்பட்டு மக்கள் மனதில் ஐயப்பாட்டை உண்டாக்குவதற்காகவும் பத்திரிகை தனது பிரசாரத்திற்காகவும் வெளியிடுகின்றன என்பதில் எள்ளளவேனும் சந்தேகமில்லை.

இந்தச் செய்திகளைத் தொடர்ந்து அரசாங்கம் நடத்திய விசாரணையின் பிரகாரம் அந்தச் செய்திகளில் ஒருவிதமான ஆதாரமுமில்லை என்று தெரியவருகின்றது. கடந்த இரண்டு மாதங்களுக்குள்ளும் பிரதானமாக சீனர்கள் எத்தனை பேர் இந்நாட்டிற்கு வந்துள்ளார்கள் என்பதை பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் நோக்கத்துடன் இங்கே தரப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் பிரகாரம் பத்திரிகையில் பிரசுரமான செய்திகள் எவ்வளவிற்குத் திரிக்கப்பட்டுள்ளதென்பது தெளிவாகும். உண்மை நிலையை மக்கள் அறிய ஆவல்கொண்டிருப்பதால் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 1965-ம் ஆண்டு பெப்ரவரி 15-திகதி வரை பிரிட்டன், அமெரிக்கா, மேற்குஜெர்மனி, மக்கள் சீனக்குடியரசு தவிர்ந்த சோஷலிஸ நாடுகள் மக்கள் சீனக்குடியரசிலிருந்து எத்தனை பேர் இலங்கைக்கு விமான மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும் வந்திருக்கிறர்கள் என்ற பட்டியலை குடியேற்ற இலாகா தயாரித்துள்ளது.

பிரிட்டன்—890, அமெரிக்கா—715, மக்கள் சீனக்குடியரசு தவிர்ந்த ஏனைய சோஷலிச நாடுகள்—274 மேற்கு ஜெர்மனி—475, மக்கள் சீனக்குடியரசு—12, ஹாங்கொங்—1.

இதிலிருந்து நிலைமை தெளிவாகிறது. 1960-ம் ஆண்டுத் தேர்தலிலும் இதேபோன்ற விபரங்களை பத்திரிகைகள் பிரசுரித்துள்ளன. இலங்கை பிளவுபடுமென்றும் இந்தியா எங்கள் நாட்டைப் கைப்பற்றக்கூடிய அபாயங்கள் இருக்கின்றதென்று அன்றும் சில பத்திரிகைகள் பிரசாரம் செய்தன.

இன்று பத்திரிகைகள் பிரசாரம் செய்யும் விதம் பொதுமக்களின் பாதுகாப்பிற்கே அபாயம் விளைவிக்கக்கூடிய வழியில் அவமதித்திருக்கின்றது. ஆகையால் பொதுமக்கள் அமைதியாகவும் ஆறுதலாகவும் பத்திரிகைகளின் செய்திகளைக்கண்டு சினமடையாமலும் இருக்கும்படியும் மறுமுறையும் மக்களுக்கு ஆலோசனை கூற பிரதமர் விரும்புகின்றர்.

திரு. டட்லிசேனநாயகாவின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடியவகையில் சீனர்கள் நடந்துகொண்டிருக்கிறர்களென்ற திரு. ஜே. ஆர், ஜெயவர்த்தனாவின் கூற்றை அரசாங்கம் கவனத்திற்கொண்டுள்ளது இந்தச் சூழ்நிலையில்திரு சேனநாயகாவிற்கு பூரண பாதுகாப்பு அளிக்கும்படி பிரதமர் தீர்மானித்துள்ளார் அத்துடன் திரு. சேனநாயகாவிற்கு தேர்தல் கூட்டங்களில் அவர் வேண்டிய பாதுகாப்பளிக்கும்படியும் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

## 'வரிவசதி அளிக்கவும்'

### அங்கத்தவர் முன்னறிவித்தல்

வவுனியா, ஞாயிறு

அண்மையில் வீசிய கோரப் புயலால் வவுனியா நகராட்சி சபை வரியிறுபபோர்களது வீடுகள், தோட்டங்கள், நெல் வேளாண்மைகள் முதலியவற்றுக்கு பெரும் சேதம் விளைவித்தது. இதனுல் வரியிறுபபோர் பெரும் கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் உள்ளாஞர்கள், நகரசபை அளித்துவந்த பல் வசதிகளுள்குறிப்பாக மின்சார வசதிகள் இல்லாமல்போயின. எனவே வரியிறுப்பாளருக்கு உதவும்பொருட்டு ஒரு "குவாட்டர்"வரியை நீக்ககபடவேண்டுமென்ற பிரேரணையொன்றை நகரசபையில் கொண்டுவரப்போவதாக நகரசபை அங்கத்தவர் மு. சபாரத்தினம் நகரசபைக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

"பொது ஸ்தாபனங்களை

# சிறுபான்மையோருக்கு திறந்துவிட தீர்மானம் செய்க"

## பட்டினசபை அங்கத்தினர்களுக்கு பிரமுகர்கள் கடிதம்

மாவிட்டபுரம், ஞாயிறு

கரவெட்டிப் பகுதி சிறுபான்மைத் தமிழர்கள் தேநீர்க் கடைகளிலும் பொதுக்கிணறுகளிலும் பிரவேசம் செய்வது பற்றிய பிரச்னையை முன்வைத்து அண்மையில் கனுவில் சனசமூகநிலைய முன்றலில் சிறுபான்மைத் தமிழர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட கூட்டமொன்றில் உடுப்பிட்டித் தொகுதியின் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ், சமசமாஜக் கட்சி அபேட்சகர்களும், மற்றும் அவ்வூர் பிரமுகர்களும் கலந்துகொண்டதைத் தொடர்ந்து இப்போது நெல்லியடி பட்டினசபையின் உறுப்பினர்கள் எல்லோரையும் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றிய பிரமுகர்கள் கூட்டாக சிறுபான்மைத் தமிழர்களுக்கு பட்டினசபைக்குட்பட்ட பகுதியில் உள்ள பொது ஸ்தாபனங்களை பாவனைக்குத் திறந்துவிடும்படி கோரும் தீர்மானமொன்றினை பட்டினசபையில் கொண்டுவந்து நிறைவேற்றும்படி கோரியுள்ளார்கள். அவர்கள் பட்டினசபை அங்கத்தவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்கள்

"சமீபத்தில் இதுசம்பந்தப்பட்ட தீர்மானமொன்றைத் தெல்லிப்பளைக் கிராமசபை நிறைவேற்றியுள்ளதும் இதனுல் அப்பகுதிநிலைமை அபிவிருத்தியடைந்துள்ளதும்தாங்கள் அறிந்திருப்பீர்கள். இந்த வழியில் உங்கள் பட்டினசங்கமும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோருகிறேம்.

1959-ம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சாதிக் குறைப்பாட்டு நீக்கச்சட்டத்திற்கமைய தங்கள் பட்டினசங்கத்திற்குட்பட்ட பொதுஸ்தாபனங்களில் சாதிவித்தியாசம் பார்க்காமல் இருப்பதற்கான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி வைத்து எமது பகுதிக்குப் பெருமை தேடித்தரும் வண்ணம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேம்.

## "கோரிக்கைகளை வென்றெடுப்போம்"

காங்கேசன்துறை, ஞாயிறு

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் நேற்றைய தினம் சிமெந்துத் தொழிலாளர்களால் திரு. நா. சண்முகதாசனுக்கு வரவேற்பளித்த கூட்டத்தில் திரு. சண்முகதாசன் பேசுகையில், வேலைநிறுத்த வழக்கில் இரண்டு கோரிக்கைகளைப் பெற்றுள்ளோம். மேலும் மற்ற கோரிக்கைகளை வென்றெடுக்கத்தொடர்ந்து போராடியே தீருவோமென்றும் கூறினர்.

"தொழிலாளர்கள் ஓர் அணியின் கீழ் திரளவேண்டும். இந்த ஆயுதத்தினுல்தான் நாம வெற்றி பெறலாமென்றும் அவர் கூறினர்.

## 'அன்றும் இன்றும்'

காங்கேசன்துறை, ஞாயிறு

"தொழிலாளர்களுக்குப்பாடுபடுவோமென்று குரல் எழுப்பிய சமசமாஜிகள், இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசே மக்களுக்கு சுபீட்சத்தைக் கொடுக்ககூடியது என்று கூறித்திரிகிறர்கள்" என்று காங்கேசன்துறையில் நடந்த ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு, நா. சண்முகதாசன் கூறினர்.

மேலும் அவர் பேசுகையில்; நேர்மையான தொழிலாளருக்காகவும் அவர்களின் உரிமைகளுக்காகவும் பாடுபடவே பாராளுமன்றத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிச் சார்பில் போட்டியிடுகிறேம் என்று ஆணித்தரமாகக் கூறினர்.

நாங்கள் செல்லும் பாதை ஒரு அழிவைக்காட்டும் பாதையல்ல. விமோசனப் பாதை என்றும் அவர் கூறினர்.

## "சம்பவநேரத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாப்பிட்டுக் கொண்டிருந்தார் எதிரிகள் வள்ளியின்வீட்டுக்கு கற்களால் எறிந்த பொழுது நான் சத்தமிட்டேன். குசினிக்குள் இருந்து கணவர் "யார்" என்று கேட்டுக் கொண்டு வெளியில் வந்தார், அச்சமயம் வள்ளியின் வீட்டிலிருந்தோ அல்லது வேறு எங்கேனுமிருந்தா வேறு ஒருவரும் வரவில்லை. எதிரிகள் சுட்டுவிட்டு வீட்டுப்பக்கமாக ஓடினர்கள். சூட்டுச் சம்பவம் நடந்த 2 மணித்தியாலங்களின் பின்னரே இராசனையும் மற்றவர்களையும் சம்பவ இடத்தில் கண்டேன்."

கட்டுவன் கிராமசேவகரான வேலுப்பிள்ளை நடராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவதினம் எனக்கு திருமணம் நடைபெற்றது. இரவு 10 மணியளவில் மூன்று நாலு தட்வை சூட்டுச்சத்தம் கேட்டது. அச்சூட்டுச்சத்தம் துப்பாக்கி சூட்டுச் சத்தமோ அல்லதுவெடிச்சத்தமோ என்று கணிக்க முடியவில்லை. ஏனென்றல் அன்று பக்கத்தில் உள்ள ஒரு கோவிலில் திருவிழா நடைபெற்றமையே அதனுல் நான் சம்பவ இடத்திற்குச் செல்லவில்லை.

சங்கரப்பிள்ளை இராசரத்தினமும் சாட்சியமளித்தார். நீதிபதி மேல்விசாரணையை அடுத்த மாதம் 4-ந் திகதிக்கு ஒத்திவைத்து அத்திகதிவரை எதிரிகளை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

எதிரிகள் தரப்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு கே வி எஸ சண்முகநாதன் ஆஜராஞர் சுன்னுகம் பொலிஸ சப் இன்ஸபெக்டர் திரு எஸ இராசநாயகம், வழக்கறிஞர் திரு எஸ நடராசா ஆகியோரின் உதவியுடன் சுன்னுகம் பொலிஸ இன்ஸபெக்டர் திரு எஸ வி மூர்த்தி வழக்கை நடத்தினர்

## அணுசக்தி

ஜாகர்த்தா, பெப் 21

மேற்கு ஜாவாவில் இந்தோனேஷிய அதிபர் சுகர்னே நேற்று அணு ஆலையொன்றை ஆரம்பித்துவைத்தார்.

## மரண அறிவித்தல்

### முத்துவேலு பொன்னம்பலம்-

பொன்னம்பலம் & சன்ஸ் ஸதாபகரும் காலஞ் சென்ற செல்லம்மாவின் அருமைக் கணவரும், தெய்வேந்திரம், சண்முகலிங்கம், சிவபாலன், காந்திமதி, பரமேஸ்வரி, தையல்நாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும் அரிநேசகுகன், யோகநாதன், சண்முகம் ஆகியோரின் மாமனுரும் மு. பொன்னம்பலம் அவர்கள் இறைவனடி ஏகினர். அன்னரின் ஈமைக்கிரியைகள் இன்று 12 மணியளவில் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

பொ. தெய்வேந்திரன்

1714

ஊர்காவற்றுறை தொகுதி
தமிழ்க்காங்கிரஸ்
அபேட்சகர்
ஸ்ரீ
நா. த. சிவஞானம்
அவர்களை ஆதரித்து
22-2-65
திங்கட்கிழமை மாலை
6-30 மணியளவில்
வேலணை
'வங்களாவடி' வெளியரங்கில்
திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்
கியூ.சி. அவர்கள் தலைமையில்
மாபெரும் கூட்டம்
ஒன்று நிகழும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org